# குளித்தலை நகராட்சி

30.11.2020.ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 10.15 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ம.முத்துக்குமார், அவர்களின் நவம்பர்–2020ஆம் மாதம் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.ரா.ராதா அவர்களின் நவம்பர்–2020ஆம் மாதம் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சியில் ஆணையாளர் மற்றும் அனைத்து இருக்கை எழுத்தர்கள் அனைவருக்கும் கணனிமூலம் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலக கோப்பின் விவரங்கள் கணனிமூலம் தெரியப்படுத்தி வருகிறது. இந்நிலையில் கணனி மற்றும் டோனர் இவைகள் பழுதுபட்டால் உடனடியாக பணியினை முடிக்க முடியாத நிலை ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு 18 எண்கள் கணனிக்கும், 13 பிரிண்டர்களுக்கும் வருடாந்திர செலவினமாக மேற்கொள்ள ரூ.1,20,000/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1485/2020/இ1)

பொருள்– 04. வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் ஆகியோர் வீடியோ கான்பிரன்ஸ் ஆய்வுக்கூட்டத்தில், நகராட்சியில் அனைத்து வாகனங்களும் தயார் நிலையில் வைக்க அறிவுறுத்தியுள்ளனர். இந்நகராட்சிக்கு சொந்தமான JCB வண்டி எண்.TN-47-Y-6449 கடந்த இரண்டு வருடங்களாக பழுதாகி நிற்கின்றது. இதனை போர்க்கால அடிப்படையில் அரசு அங்கீகாரம் பெற்ற காந்தி மோட்டார் பணிமனையில் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1565/2020/எச்1)

பொருள்– 05. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக இருப்பதால் சாலைகளை புதுபித்துக்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே கீழ்க்கண்டுள்ள சாலைகள் விபரம்.

| வ. எண். | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | பெரியார் நகர் 2வது குறுக்கு தெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.350 | 4.50 | 20.00 |
| 2. | பெரியார் நகர் 2வது முதன்மை தெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.450 | 4.50 | 18.50 |
| 3. | மணத்தட்டை ஆதிதிராவிடர் தெருவில் (இரயில்வே கேட் முதல் முருகன் இடம் வரை) தார்சாலை மேம்படுத்தும் பணி | 1.000 | 4.00 | 31.50 |
| 4. | கடம்பர் கோவில் மேற்கு மற்றும் தெற்கு மடவளாகத் தெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.200 | 15.00 | 35.00 |
| 5. | கடம்பர் கோவில் வடக்கு மற்றும் கிழக்கு மடவளாகத் தெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.205 | 16.00 | 38.00 |
| 6. | பெரியார் நகர் 3வது குறுக்கு தெருவில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.350 | 4.50 | 15.50 |
| 7. | வைஸ்யாள் தெருவில் உள்ள தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.370 | 6.00 | 17.50 |
| 8. | சண்முகா நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 0.600 | 1.20 | 25.00 |
| 9. | பெரியார் நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3.10 | 0.90 | 85.00 |
| 10. | கந்தசாமி பிள்ளைத் தெருவில் தடுப்பு சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 0.110 | 5.00 | 24.00 |
| 11. | மலையப்பநகர் முதல் பெரியபாலம் வரை தெருவில் தடுப்பு சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 0.240 | 5.00 | 48.50 |
| 12. | பேராளம்மன் கொவில் தெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.210 | 7.00 | 14.00 |
| 13. | ஆண்டார் தெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.225 | 6.00 | 13.00 |
| 14. | பழைய ஆஸ்பத்திரி கடைதெரு தார்சாலை மேம்படுத்தும் பணி | 0.225 | 7.00 | 14.50 |
| | மொத்தம் | 5.835 | | 400.00 |

மேலே கண்டுள்ள சாலைகளுக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீடு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளபடி தொகைக்கு அனுமதி பெறவும் மேற்கண்ட தொகையினை முழுவதும் மானியமாக ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் அனுமதிக்க வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் வழியாக கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1714/2020/இ1)

..3..

பொருள்– 06. இந்நகராட்சிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து அனைத்து நகராட்சிகளிலும் அம்மா உணவகம் கட்ட அனுமதி வழங்கியது. கடந்த நான்கு வருடங்களாக பொதுமக்களுக்கு காலை மற்றும் மதியம் உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்கள் மக்களின் விருப்பத்தினை ஈடுசெய்யும் நோக்கில், தோசை, சப்பாத்தி இவைகள் தயார் செய்து விநியோகம் செய்தால் பொதுமக்கள் அதிகம் உணவிற்கு வருவார்கள் என்பதால், தோசைக்கல் மற்றும் அடுப்பு ஆகிய பொருட்கள் தேவைப்படுகிறது. இதனை அவசர அவசிகம் கருதி மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கும், இதற்குரிய செலவுத் தொகை உத்தேசமாக ரூ.25,000/– ஆகும். அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி செய்யவும், பணிக்கான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). அவசர அவசியம் கருதியும், குறைவான தொகையாக இருப்பதாலும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்றும் பணிக்குரிய தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1640/2020/இ1)

பொருள்– 07. இந்நகராட்சி 2020–2021.ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணனி பிரிவிற்கு தேவையான பேப்பர்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றினை அவ்வப்போது தேவைக்கேற்ப, அரசு சார்பு நிறுவனமான தரமணி மகளிர் எழுது பொருட்கள் மற்றும் அச்சு தயாரிப்பு தொழில் கூட்டுறவு சங்கம் நெ.46, (பழைய எண்.248) பீட்டர்ஸ்ரோடு, ராயப்பேட்டை, சென்னையில் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கும் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1660/2020/காசாளர்)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிமூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களை பொதுமக்கள் அறியும் வகையில், தினசரி நாளிதழ் மற்றும் தொழில்மலரில் அரசு விளம்பரம் மூலம் வெளியிட வேண்டி, மாவட்ட நிர்வாகம், கரூர் அவர்கள் மற்றும் இந்நகராட்சி ஆணையர் அவர்கள் மூலமாக தேவைப்படும் நாட்களில் அரசு விளம்பரம் செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, 2020–2021 ஆண்டிற்கு செலவிடப்படும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1260/2020/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி 23வது வார்டுக்கு உட்பட்ட என்.ஜி.ஜி.ஓ. காலனியில் ஏற்கனவே கட்டட்பபட்ட வடிகால்கள் (கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு ஆகிய நான்கு திசைகளிலும்) உடைந்து காணப்படுவதால், அதனை சரிசெய்வதற்கும், மற்றும் தரைமட்ட பாலம் அமைக்க வேண்டியது அவசியம் என்பதால், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/– (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). தயார் செய்யப்பட்ட செலவினத்தை 2020–2021ஆம் நிதி ஆண்டில் அறிக்கையில் சேர்த்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1667/2020/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோகம் செய்யும் தலைமை நீர் உந்து நிலையத்தில், நாப்பாளையம் பம்பிங் ஸ்டேசனில் 20HP டெக்கான் (நீர் மூழ்கி மோட்டார்) மோட்டார் காயில் பழுதடைந்துவிட்டது. மேலும், பெரியார்நகர் பம்பிங் ஸ்டேசனில் 33HP மோட்டாரில் ஸ்டார் டெல்டா பழுதடைந்துவிட்டது. குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வது நகராட்சியில் முக்கியமான பணி என்பதாலும், உடனடியாக குடிநீர் விநியோகம் செய்வதற்கு மோட்டார் சரிசெய்ய வேண்டியது அவசியம் என்பதாலும், அவசர அவசியம் கருதி பணியினை செய்வதற்கும் அதற்கு உண்டான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவீனத்தை 2020–2021ஆம் நிதி ஆண்டில் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1367/2020/இ1)

பொருள்– 11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தார் சாலைகள், சிமெண்ட் சாலை மற்றும் கழிப்பிடம் ஆகியவை பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் இடையூறாக இருப்பதாலும், கழிப்பிடம் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இல்லாததாலும், கீழ்க்கண்ட பணிகளை செப்பணியிடுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகள் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | வையாபுரிநகர் பொதுக்கழிப்பிடம் மராமத்து பணிக்கு | ரூ. | 3,20,000/– |
| 2) | மலையப்பநகர் காலனியில் தரைமட்ட பாலம் அமைக்கும் பணிக்கு | ரூ. | 1,70,000/– |
| 3) | தெற்கு மணத்தட்டை சாலையில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு | ரூ. | 8,70,000/– |
| 4) | பழைய மார்க்கட் சாலையில் மழைநீர் பக்கவாட்டு வாய்க்கால் மராமத்து பணி | ரூ. | 1,60,000/– |
| 5) | டவுன்ஹால் சாலை மற்றும் வையாபுரிநகர் சிமெண்ட் சாலை பழுது பார்க்கும் பணி | ரூ. | 6,50,000/– |

மேலே கண்டுள்ள விவரப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை, பணி செய்வதற்கும் உரிய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சேர்த்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1657/2020/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 மற்றும் 3, இவ்விரு வார்டுகளிலும் பொதுமக்கள் பயன்படும் வகையில் 2000–லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டு அதை பயன்படுத்திவந்த நிலையில், தற்போது இரண்டு இடங்களிலும் உடைந்து தண்ணீர் தொட்டி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை பொதுமக்கள் அடிக்கடி கேட்டு வருகின்றனர். எனவே, மேற்கண்ட இடங்களில் உள்ள தண்ணீர் தொட்டியை மாற்றி வைக்க வேண்டியது அவசியமானதால், அதனை வாங்கி பொருத்த உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்த செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து 2020–2021ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்த்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1687/2020/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15இல் மலையப்பநகர் பகுதிக்கு திருச்சி மெயில் சாலையிலிருந்து மேற்படி பகுதிக்கு செல்வதற்கு வாய்க்கால் கடந்து செல்வதற்காக ஒரு பாலம் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பாலத்தில் கைப்பிடி சுவர் இல்லாததால், இரண்டு சக்கர வாகனத்தில் செல்பவர்கள், வயதான முதியோர்கள் தடுமாறி விழுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. இதனை மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்கள் நேரடியாக சார் ஆட்சியர் அவர்களிடம் கூறி சரிசெய்ய சொன்னதின்பேரில், உடனடியாக கைப்பிடி சுவர் கட்டுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட பணியினை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சேர்த்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1611/2020/இ1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சி 1994ஆம் ஆண்டுமுதல் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்திசெய்வது நகராட்சியின் கடமையாக இருப்பதால், பொதுமக்கள் அதிகம் பயன்படக்கூடிய அலுவலகமாக இருப்பதாலும், யார் வருகிறார்கள், போகிறார்கள் என்பதனை அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி நகராட்சிக்குட்பட்ட இடங்களில் Web Camera மற்றும் அதற்கு தேவையான உபகரணங்கள் பொருத்துவது மற்றும் இதர பணிகள் மிகவும் அவசியமாக இருப்பதால், மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத் தொகை ரூ.3,50,000/–ஐ, 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அறிக்கையில் சேர்த்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1491/2020/இ1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சியின் 2019–2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மற்றும் ஆண்டுக் கணக்குகள் துரிதமாக முடித்து தணிக்கைக்கு வழங்க வேண்டி, தனியார் வல்லுனர் திரு.A.V.ஸ்ரீதர், த/பெ.வைரவேல், திருச்செங்கோடு என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்படி 2019–2020ஆம் ஆண்டு கணக்குகள் முடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தனியாரால் 2019–2020ஆம் ஆண்டு கணக்குகள் செவ்வனே முடிக்கப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஆண்டு கணக்குகள் முடித்தமைக்கான கட்டணம் தொகை ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1703/2020/பி1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி மணல் சார்ந்த காவேரி ஆற்றின் அருகில் இருப்பதால், இங்கு பாதாள சாக்கடை அமைப்பு அமைக்க இயலாததால் கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மேற்படி கழிவுகளை சுத்திகரிப்பு செய்ய அரசு ரூ.2,85,00,000/– நிதி ஒதுக்கீடு செய்து மேற்படி பணி நடைபெற்று முடியும் நிலையில் உள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாக அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் நடைமுறை விதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது. உப விதிகளை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் வழிமுறையாக கருத்துரு அனுப்பி, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 17. இந்நகராட்சி சேவை வரியாக 01.10.2013 முதல் 30.06.2017 வரை ரூ.14,35,258/– செலுத்த தெரிவித்து, AC of GST and Central Excise, Karur தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் சப்கா விஸ்வாஸ் (நிலுவையில் உள்ள மத்திய கலால் மற்றும் சேவை வரி வழக்குகளுக்கான தீர்வு) திட்டத்தின்கீழ் ரூ.5,74,103.20 செலுத்தினால் இவ்வழக்கு முடிவுக்குவரும் எனவும், மேற்படி தொகையை 30.06.2020க்குள் செலுத்த வேண்டுமென திரு.T.சண்முகமூர்த்தி, சேவைவரி ஆலோசகரால் தெரிவிக்கப்பட்டது. போதுமான நிதியில்லாத காரணத்தால் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் கட்ட இயலாதநிலையில் 21.07.2020இல் செலுத்தப்பட்டது. இதன் பொருட்டு மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, இவ்வழக்கினை சென்னை தீர்ப்பாயகத்தில் (Tribunal Chennai) இரண்டாம் மேல்முறையீடு செய்ய VRUKSHA & Co திருச்சி நிறுவனத்தினை நியமனம் செய்வதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.4417/2018/அ1)

## குளித்தலை நகராட்சி

30.11.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 98 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 99 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 100 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 101 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 102 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 103 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 104 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 105 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 106 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 107 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 108 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 109 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 110 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 111 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 112 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 113 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 114 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.